மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

2025 ம் ஆண்டு ஜீன் மாதம் 25–ம் நாள் புதன்கிழமை

அ.வ.எண்.123/22

வா.சா.2

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: மாரி தேதி :25.06.25

வயது : த/பெ : லெட்சுமணன்

கிராமம் : தொழில் :

மாவட்டம்:

---

<u>25.06.25 குறுக்கு விசாரணை(1, 2 பிரதிவாதிகள் தரப்பு)</u>

1. நான் பிறந்து வளர்ந்தது வல்லநாடு. தாவா சொத்து சர்வே எண் தெரியாது. இடம் தெரியும். தாவா சொத்து வீட்டின் பின்பகுதியாகும். தாவா சொத்து முற்றமா? என்றால் ஆம். வீட்டின் முன்பு உள்ள பகுதியை தான் முற்றம் என்று கூறுவார்கள். தாவா சொத்தின் கிழக்கு மற்றும் மேற்கு பக்கம் தங்கராஜ் இடம். வடக்கு பக்கம். தெரியும் பெயர் வரவில்லை. தெற்கு பக்கம் செல்லையா ஆசாரி வீடு உள்ளது.

2. செல்லையா ஆசாரி வீட்டிற்கு தெற்கு பக்கம் கிழ மேல் தெரு உள்ளது. தாவா சொத்திற்கு எது பாதை என்றால் கிழக்கு மற்றும் மேற்கு பக்கம் பாதைகள் உள்ளன. என்னுடன் 5 ம் பிரதிவாதி சேர்ந்து இன்று வந்துள்ளாரா என்றால் என்னுடன் வரவில்லை. காவல் துறை கண்காணிப்பாளர், வட்டாட்சியர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோரை 5 ம் பிரதிவாதிக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேன். எதற்காக மேற்படியார்கள் பாராட்டியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் ஊருக்கு நல்ல காரியம் செய்வார். அதனால் அவ்வாறு சொல்லியுள்ளேன்.

3. என்னை வாதிதான் சாட்சியம் அளிக்க அழைத்தார். தாவா சொத்து வாதிக்கு 2001 ல் மாரியப்பனிடம் கிரையம் வாங்கியதன் அடிப்படையில் தனிப்பட்ட பாத்தியம். வேறு யாருக்கும் உரிமை கிடையாது. அதற்கான கிரைய பத்திரத்தை பார்த்துள்ளேன். வாதி தாக்கல் செய்துள்ள கிரைய பத்திரத்தில் வாதிக்கு தனிப்பட்ட பாத்தியம் கிடையாது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தினை பொறுத்து வழங்கியுள்ள பட்டாவினை

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.06.25 20:02:11 +0530

பார்த்துள்ளேன். எங்கள் ஊரில் பாதாளகரண்டி அம்மன் என்ற கோவில் உள்ளது என்றால் உள்ளது.அது கற்பகம் விநாயர் கோவில் பக்கத்தில் உள்ளது. பாதாள கரண்டி அம்மன் கோயிலுக்கு கட்டிடம் உள்ளதா என்றால் இல்லை. அந்த கோயில் எந்த சமுதாயத்துக்கு பாத்தயப்பட்டது என்றால் அனைத்து சமுதாயத்தினரும் வழிபடுவார்கள்.

4. பாதாள கரண்டி அம்மனை மருத்துவ சமுதாயத்தை சேர்ந்தவர்கள் மட்டும்தான் வழிபடுவார்கள் என்றால் சரியல்ல. வாதியும் 5ம் பிரதிவாதியும் என் சமுகத்தை சார்ந்தவர்கள். எங்கள் சமுகத்தில் இறந்த நபர்களுக்கு 1, 2 பிரதிவாதிகள் இறுதி சடங்கு செய்யக்கூடிய குடிமகன் பணி செய்வார்கள் என்றால் சரிதான். அவ்வாறு எத்தனை குடும்பங்கள் 1,2 பிரதிவாதிகளை சார்ந்தவர்கள் உள்ளனர் என்றால் 6 குடும்பங்கள் உள்ளனர். எங்கள் சமுகத்தை சார்ந்தவர்கள் 2000 தலைகட்டு இருப்பார்கள்.

5. நான் எங்கள் ஊரில் தலைவராகவோ, பெற்றோர் ஆசிரியர் தலைவராகவோ, கூட்டுறவு சங்கத் தலைவராகவோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ பதவிகளில் இருந்தது கிடையாது என்றால் சரிதான். அதேபோன்று 5ம் பிரதிவாதியும் எந்த பதிவிகளிலும் இருந்தது கிடையாது என்றால் சரிதான். ஊர் பெரியவர்கள் யார் யார் வாதியையும் 5ம் பிரதிவாதியையும் சமாதானம் செய்தோம் என்றால் நான், பிள்ளமுத்து, சின்னமாரி, முத்து ஆகியோர் சமாதானம் செய்தோம். என் மீது குற்ற வழக்கு எதுவும் இருந்ததா என்றால் இல்லை. என் மீது கொலை வழக்கு இருந்தது என்றால் சரியல்ல.

(வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியின் நடத்தை குறித்து எழுப்படும் கேள்வி அவரது தனிப்பட்ட குணாதிசியங்களை பழிச்சாட்டுவதாக உள்ளதாக ஆட்சேபனை செய்தார். 1,2 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியம் நிரூபண உறுதி கூற்றில் 4,5 பத்திகளில் வாதி, 5ம் பிரதிவாதிகளின் குணாதிசியம் பற்றி குறிப்பிட்டுள்ளதாக கூறினார். சாட்சியின் குண நலன்கள் பற்றி முதல் விசாரணை சாட்சியம் உள்ளதால் மேற்படி ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டு கேள்வி அனுமதிக்கப்படுகிறது.)

6. சாட்சி தற்போது கொலை வழக்கு இருந்து விடுதலை ஆகிவிட்டதாக கூறுகிறார். ஊரின் முக்கிய நபர்களோடு மது அருந்தி விட்டு 1,2 பிரதிவாதிகள் பிரச்சனை செய்து வருவதாக நான் சொல்லியுள்ள நிலையில் அந்த முக்கிய நபர்கள் யார் என்றால் வாதி வீட்டாருடன் பிரச்சனை செய்தார். இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆம். நான் சொல்லுவது போல் எந்த குற்ற சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. காவல் துறையின் எந்த குற்ற வழக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக பதிவு செய்யப்படவில்லை

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.06.25 20:02:22 +0530

என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வசவப்பபுரம் துர்க்கா சலூான் கடையில் வேலை பார்க்கிறார். அது அவர் சொந்த கடை கிடையாது. 2ம் பிரதிவாதி பில்டிங் காண்ரக்டராக தனியார் தொழில் செய்து வருகிறார். நான் சொல்வது போல் 2ம் பிரதிவாதி காண்ரக்டர் வேலை செய்யவில்லை என்றும் ஆம்புலன்ஸ் பராமரிப்பு பணி செய்கிறார் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பாதாள கரண்டி அம்மன் கோயில் வைத்து 1, 2 பிரதிவாதிகள் தரப்பினர் வழிபட்டு வருகின்றனர் என்றால் சரியல்ல. நான் சொல்வது கற்பகவிநாயர் கோயில் பக்கம் பாதாள கரண்டி அம்மன் கோயில் இல்லை என்றால் சரியல்ல. பாதாள கரண்டி அம்மன் கோயிலுக்கு மேற்கு பக்கம் யார் இடம் உள்ளது என்றால் 5ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ 11 புகைப்படத்தில் சுற்றுச் சுவருக்கு அடுத்துள்ள வீட்டில் இருந்து அந்த சுவருக்கு முன்புள்ள கோயிலுக்கு வர வழியில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 11 ல் மேற்கு பக்கம் உள்ள சுற்றுச் சுவரில் வழி எதுவும் இல்லை என்றால் சரிதான்.

8. அதனால் வாதி மற்றும் 5ம் பிரதிவாதி அனுபவத்தில் தாவா சொத்து இல்லை என்றால் சரியல்ல. 2001 ல் வா.சா.ஆ 11 ல் காண்பிக்கப்பட்டுள்ள பாதாள கரண்டி அம்மன் கோவிலை கிரையம் செய்துகொடுக்கவில்லை என்றால் 2001 ல் மாரியப்பன் கிரையம் கொடுத்துள்ளார். மாரியப்பன் 2001 ல் கிரையம் செய்து கொடுத்த சொத்து சர்வே எண் 757/37 என்றால் எனக்கு சர்வே எண் தெரியாது. எனக்கு எழுதி கொடுத்தது மட்டும் தான் தெரியும். வழக்கு சொத்து விபரம் பற்றி எதுவும் தெரியாமல் வாதி மற்றும் 5ம் பிரதிவாதி உறவினர்கள் என்பதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளது போல் 5ம் பிரதிவாதிக்கு எந்த பாராட்டு சான்றிதழும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல.

9. 5ம் பிரதிவாதி தாவா சொத்தினை 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டு மோசடியாக வாதியை வைத்து தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u>

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.06.25 20:02:30 +0530

(3 முதல் 5 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜர் இல்லை. அவர்கள் தரப்பில் எந்த பிரதிநிதித்துவமும் இல்லை. எனவே 3 முதல் 5 பிரதிவதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.06.25 20:02:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.